**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 157/2021**

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 ராஜா - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 13.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) இறந்து போன கிருஷ்ணாரெட்டியாரை தெரியுமா என்றால் தெரியும். அவரது மகன்தான் 1ம் வாதி சீனிவாசன் என்றால் சரிதான். கிருஷ்ணா ரெட்டியாருக்கு வெங்கடாச்சலம் என்ற மகன் இருந்து அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வெங்கடாசலத்தின் மனைவிதான் 3 ம் வாதி இந்திராணி என்றால் சரிதான். 4 முதல் 6 வாதிகள் வெங்கடாசலத்தின் மகள்கள் என்றால் சரிதான். கிருஷ்ணரெட்டியாரின் தகப்பனார் பெயர் குன்னமரெட்டியார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள குன்னமரெட்டியார் நிலத்தில் அவர் கரும்பு பயிர் செய்து வந்தாரா என்றால் இல்லை. குன்னமரெட்டியார் தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள தனது இடத்தில் சொந்தமாக கரும்பு ஆலை வைத்து வெல்லம் தயார் செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடபுறம் குன்னமரெட்டியார் மற்றும் கிருஷ்ணாரெட்யாருக்கு சொந்தமான இடம் உள்ளதா என்றால் கிருஷ்ணா ரெட்டியாருக்கு உள்ளது, குன்னமரெட்டியாருக்கு இல்லை. தாவா சொத்திற்கு கிருஷ்ணா ரெட்டியார் மற்றும் அவரது மகன்கள் சீனிவாசன், வெங்கடாசலம் ஆகியோர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல, பட்டாவோ பத்திரமோ இல்லை, கிருஷ்ணா ரெட்டியாரின் பூர்வீக சொத்தாகும்.

2) தாவா 3 ம் அயிட்ட சொத்தில் ரோடு போட யார் மனு கொடுத்தது என்றால், ஊர் பொதுமக்கள் மற்றும் கிருஷ்ண ரெட்டியார் மற்றும் நானும் மனு கொடுத்தேன். அரசு மேற்படி மனுவின் அடிப்படையில் யார் பெயருக்கு ரோடு போட வேலை உத்தரவு வழங்கினார்கள் என்றால், மேற்படி வேலையானது 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் ரோடு போட ஒதுக்கப்பட்டது. மேற்படி திட்டத்தில் தர்மராஜ் என்பவர் ஒரு நபர் ஆவார். அவர் பெயரில் வேலை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. தர்மராஜ் இவ்வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். தர்மராஜ் பதிவு செய்த ஒப்பந்ததாரரா என்றால் இல்லை. 100 நாள் திட்டத்தில் ஆட்கள் உழைப்பைதான் கொடுக்க முடியும் என்றும், ரோடு போடுவதற்கான ஜல்லி, சிமெண்ட் எவ்வாறு கிடைக்கும் என்றால் 28.10.2020 ம் தேதியன்று பி.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் ரூ.8,41,000/- ரோடு அமைக்க ஒதுக்கப்பட்டது. பி.சா.ஆ.8 ஆவணம் உண்மை நகலில் யார் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஊராட்சி மன்ற தலைவர்

போட்டுள்ளார். பி.சா.ஆ.8 ஊராட்சி மன்ற தலைவருக்கு அனுப்பப்பட்ட திட்ட மதிப்பீடு என்றால் சரியல்ல.

3) பி.சா.ஆ.8 ஆவணம் வேலை செய்வதற்கான உத்தரவு அல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.8 ஆவணத்தில் வட்டாட்சி அலுவலரோ, மாவட்ட ஆட்சியரின் கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். ரோடு போட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ரோடு போடுவதற்கு எத்தனை ஆட்கள் பயன்படுத்தப்பட்டார்கள் என்றும், அவர்களுக்கு எவ்வளவு தொகை ஊதியமாக வழங்கப்பட்டது என்றால் 245 நபர்கள் வேலை செய்தார்கள், அவர்களுக்கு எங்கள் கையில் இருந்த பணத்தை போட்டுத்தான் சம்பளம் வழங்கினோம். அதற்கான தொகையை நாங்கள் இன்னும் பெறவில்லை. அவ்வாறு நானும், தர்மராஜும் எவ்வளவு தொகையை வேலையாட்களுக்கு சம்பளமாக கொடுத்தோம் என்றால் ரூ.3,00,000/- கொடுத்தோம். சிமெண்ட், ஜல்லி ஆகியவற்றிற்கு எவ்வளவு தொகை செலவு செய்தோம் என்றால் ரூ.3,40,000/- நாங்கள்தான் செலவு செய்தோம். பொதுவாக அரசு சார்பில் ஒரு பணியை செய்யும்போது ஒரு அரசு பொறியாளர் முன்னிலையில்தான் பணி செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

4) அவ்வாறு அரசு பொறியாளர் முன்னிலையில்தான் வேலை நடந்ததா என்றால், அரசு இளநிலை பொறியாளர் செல்வி என்பவர் முன்னிலையில்தான் நடந்தது. மேற்படி ரோடு எத்தனை நாட்கள் போடப்பட்டது என்றால் சுமார் 6 மாதங்கள் போடப்பட்டது. எந்த தேதியில் இருந்து எந்த தேதிவரை போடப்பட்டது என்றால் 21.05.2021 ல் வேலை ஆரம்பித்து 21.12.2021 ல் முடிக்கப்பட்டது. தாவா சொத்து கிருஷ்ணாரெட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவர் இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரிந்தும், எவ்வித அரசு உத்தரவும் இல்லாமல் ஊர் பொதுமக்களின் உதவியோடு சட்டத்திற்கு விரோதமாக மேற்படி ரோட்டை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. கிருஷ்ணாரெட்டியார் உயிருடன் இருந்த போதே மேற்படி ரோடு போடப்பட்டது. சாட்சி தானாக கிருஷ்ண ரெட்டியார் 03.06.2021 ல் இறந்து விட்டதாகவும், அதற்கு 6 மாதத்திற்கு முன்பு ரோடு போடப்பட்டுவிட்டது என கூறுகிறார். கிருஷ்ணரெட்டியார் இடத்தில் நான் ரோடு போட சென்றபோது சீனிவாசன் மற்றும் அவரது மகன் கார்த்திக் இருவரும் தடுத்து பிரச்சினை செய்தார்கள். அவர்களுக்கு எதிராக நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம்.

5) மேற்படி குற்ற வழக்கில் நான் சாட்சியளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என சீனிவாசன், கார்த்திக் இருவரும் விடுதலை செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். கிருஷ்ணாரெட்டியார் 20 ரூபாய் பதிவு

செய்யாத பத்திரத்தில் தனது இடத்தில் ரோடு போட அனுமதி வழங்கியது போல ஆவணத்தை பொய்யாக உருவாக்கியதால் அது போலியானது என சீனிவாசன் என்மீது ஒரு புகார் கொடுத்தாரா என்றால் பொய்யாக புகார் கொடுத்தார். சீனிவாசன் கொடுத்த புகாரின் அடிப்படையில் என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் பொய்யாக பதிவு செய்யப்பட்டது. அதை குற்றவியல் நடுவர் அப்போதே கிழித்து ரத்து செய்துவிட்டார். நான் சொல்வது தவறு என்றும், மேற்படி வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா 3 ம் அயிட்ட சொத்திற்கு என் பெயரிலோ, மற்ற பிரதிவாதிகள் பெயரிலோ ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் பெயரிலோ, தர்மராஜ் பெயரிலோ மேற்படி ரோட்டை போடலாம் என ஊர் பொதுமக்களோ, அல்லது பஞ்சாயத்திலோ தீர்மானம் போடப்பட்டது என்றால் இல்லை. என் பெயரிலோ, 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயரிலோ, தர்மராஜ் பெயரிலோ ரோடு போட அரசு உத்தரவு கொடுத்துள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.7 மனு நான்தான் கொடுத்தேனா என்றால் ஆமாம்.

6) ரோடு சம்பந்தமாகத்தான் பி.சா.ஆ.7 ல் மேற்படி தகவல் கேட்டுள்ளேனா என்றால் ஆமாம். ஆனால் முழுமையான பதில் தரவில்லை. பி.சா.ஆ.7 ல் தகவல் 4 ல் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலை அமைக்கும் பணிக்கு பட்டியல் வரப்பெறவில்லை மேலும் கோரப்பட்டுள்ள இடத்திற்கு சிமென்ட் சாலை அமைக்கப்பட்டது தொடர்பாக நீதிமன்ற வழக்கு இருப்பதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என கண்டுள்ளது என்றால் சரிதான். தகவல் 6 லும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலைக்கு பட்டியல் வரப்பெறவில்லை என கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள தகவல்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. சாலை அமைப்பது சம்பந்தமாக வருவாய்துறை அதிகாரிகள் நேரடியாக விசாரணை செய்து பட்டா நிலத்தில் சாலை அமைக்க இயலாது என கூறிய விபரம் தெரியுமா என்றால் வருவாய் கோட்டாட்சியர் புஷ்பாதேவி, கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் மற்றும் 16 அதிகாரிகள் இடத்தை பார்வையிட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் சாலை பணியை நிறுத்த வேண்டாம், தொடர்ந்து செய்யுமாறு கூறினார்கள்.

7) 05.08.2021 ம் தேதி பட்டா நிலத்தில் சாலை அமைப்பது சம்பந்தமாக சமாதான கூட்டம் நடந்ததா என்றால், நடந்தது. தேதி தவறாக உள்ளது. அதில் நானும் கலந்து கொண்டேன். அதில் என்ன முடிவு செய்யப்பட்டது என்றால் வட்டாட்சியர் பணம் பெற்றுக் கொண்டு ஒருதலைப்பட்சமாக முடிவு செய்துவிட்டார். சமாதான கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் போட்டேன். மேற்படி சமாதான கூட்ட முடிவில் பட்டா நிலத்தில் 23.08.2021 ம் தேதிக்குள் பட்டாதாரர்களிடம் இருந்து பஞ்சாயத்து மூலமாக

சம்பந்தப்பட்ட இடத்தை பஞ்சாயத்தின் பேரில் ஆவணம் எழுதி பதிவு செய்த பின்னிட்டு சாலை அமைக்கும்படி முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகளுக்கும் எங்களுக்கும் இடையே உள்ள முன்விரோதம் காரணமாக நாங்கள் வாதிகளுக்கு தொடர்ந்து இடையூறு செய்வதால்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணம் பால்ராஜ் என்பவரால் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ல் என் பெயரோ, 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயரோ இல்லை என்றால் சரிதான். ஊர்பொதுமக்கள் சார்பாக அனுப்பப்பட்டது. நான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியா என்றால் இல்லை, நான் சமூக ஆர்வலர்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**